# அடியோர் யாம் தரும் காணிக்கையை

அடியோர் யாம் தரும் காணிக்கையை
அன்பாய் ஏற்பாய் ஆண்டவரே - ( 2 )

**1**
பாவியென்றெம்மைப் பாராமல்
பாவத்தின் தீர்வையை அடையாமல் -(2)
பரிகாரம் என ஏற்றிடுவாய்
பலியாய் எமை நீ மாற்றிடுவாய்

**2**
மேலொரு வாழ்வு உண்டு என்று – எம்
மேலெழும் துன்பத்தை மறக்கின்றோம்-(2)
மேலும் துன்பங்கள் அடைந்தாலும்
மேன்மையின் பலியாய்த் தருகின்றோம்

**3**
வாழ்வுக்கு ஒருநாள் முடிவு உண்டு –பின்
வாழ்வினில் எமக்கென எது உண்டு
என் மனம் அறிந்ததென் பயனென்னவோ
எல்லாம் அறிந்தவர் நீரல்லவோ